**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**
**CC No.16/2026**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw2 /Pw1 |
| Name | : Jayaprathap |
| Father/Husband's Name | : Muthuthanan |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 33 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05.03.2026.

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மறைமலைநகர் காவல்நிலையத்தில் 2ம்நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 11.11.2025 ம் தேதி காலை 11.30 மணியளவில் நான் பணியிலிருந்தபோது, ரோந்து பணியாக நானும், உதவி ஆய்வாளர் மோகன், கார்த்திக் தலைமை காவலர் ஆகியோர்களுடன் ரோந்து பணியாக மதுவிலக்கு மற்றும் கஞ்சா வேட்டையாக பொத்தேரி ஏரிக்கரை அருகே கண்காணிக்க சென்று போது, மேற்சொன்ன உதவி ஆய்வாளர் அவர்களுக்கு ரகசிய தகவல் கிடைத்ததின் பேரில், காலை 11.30 மணியளவில் சோதனைக்கான உபகரணங்களை எடுத்து கொண்டு, பொத்தேரி ஏரிக்கரை அருகே கண்காணித்த போது, ஒரு ஆண் நபர் சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்தவரை என்னை பார்த்தவுடன் ஓட முயற்சித்தவரை நாங்கள் மடக்கி பிடித்து விசாரித்த போது, முன்னுக்கு பின் முரணாக கூறியவரை பின்னர் தன் பெயர் ஸ்ரீராம் த.பெ. ராமசந்திரன் என்றும், மறைமலைநகரை சேர்ந்தவர் என்று கூறியவரை தற்போது நீதிமன்ற ஆஜரில் இருக்கும் எதிரியை பிடித்து விசாரணை செய்தோம். பின்னர், மேற்படி, ஆஜர் எதிரியிடம் உதவி ஆய்வாளர் உங்களை சோதனை செய்வதற்கு சாட்சிகளாக குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன் சோதனை செய்வதற்கு தேவையா என்று கேட்டபோது, அதற்கு எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் நீங்களே

சோதனை செய்யும்படி அனுமதி கொடுத்ததின் பேரில், உதவி ஆய்வாளர் எதிரி கணேசன் என்பவரை சோதனை செய்த போது, ஒரு பாலீத்தீன் பையிலிருந்து ஆஜர் எதிரி கொடுத்த வைத்திருந்த கஞ்சாவை எடைபோட்டு பார்த்த போது 50 கிராம் அளவு கொண்ட கஞ்சாவை பச்சை நிறத்தில் ஒருவித நெடியுடன் கூடிய துர்வாசத்தில் இருந்ததை குறித்து கேட்டபோது, அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சாவை விற்பதற்காக வைத்திருப்பதாக சொன்னார். அப்போது உதவி ஆய்வாளர் உரிய காரணம் கூறி, ஆஜர் எதிரியை கைது செய்தபோது, எதிரி தான் வைத்திருந்த 50 கிராம் கஞ்சாவை உதவி ஆய்வாளர் அவர்களிடம் எடுத்து கொடுக்க, அதை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். அதற்கு நானும், தலைமை காவலர் கார்த்திக் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். எனது கையெழுத்துடன் கூடிய கைப்பற்றுதல் மகசர் **அதசா.ஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் சேர்ந்து, எதிரியின் மீது NDPS சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை:**

எனது காவல்நிலையத்தில் 11 மணியளவில் தகவல் கிடைத்தது. பொது நாட்குறிப்பில் ரோந்து பணிக்கு செல்வதை குறித்து குறித்து வைத்தேன் என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் ரோந்து பணி செல்வதற்கு உத்தரவு கொடுத்தார். சம்பவ இடத்திற்கு 11.15 மணியளவில் சென்றுவிட்டோம். சம்பவ இடத்திற்கு செல்லும் போது தரசு, பாதுகாப்பு உடை, ஆகியவற்றை எடுத்து கொண்டு சென்றோம். பொத்தேரியில் 2 ஏரிகள் உள்ள விவரம் எனக்கு தெரியும். NH யில் இருக்கும் ஏரிக்கு பின்புறத்தில் இருக்கும் ஏரிக்கு சென்றோம். ஏரியிலிருந்து மேற்கு திசை நோக்கி பார்த்தால் வலது பக்க ஏரியும், இடது பக்கம் எஸ்ஆர்எம் மருத்துவமனையும், கடைகளும் இருக்கும். அங்கு மருத்துவமனை இருப்பதால் அங்கு மக்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். அங்கு மக்கள் நடமாட்டம் இருந்தும் ஆஜர் எதிரி மீது தவறான வழக்கு பதிவு செய்வதற்காக போலீசாரே சாட்சியாக இருந்தோம் என்றால் சரியல்ல. வழக்கிற்கு தேவையான ஆவணங்களை சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்தோம். வழக்கிற்கு தேவையான ஆவணங்களை கையால் எழுதினோம். நான் எத்தனை ஆவணங்களில் கையெழுத்து போட்டேன் என்றால் 2 ஆவணங்களில் கையெழுத்து போட்டேன். சம்பவ இடத்தில் தயார் செய்த மகசரிலும், மற்றோரு ஆவணத்திலும் கையெழுத்து போட்டேன். சம்பவ இடத்தில்

தயார் செய்த மகசரில் கையெழுத்து போடவில்லை என்றாலும், சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், உயர் அதிகாரியின் உத்தரவின் பேரில் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/- S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.